**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No.486/2024**
**வழக்கு சாட்சி PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.கருப்பசாமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | குருசாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | இராஜபாளையம் | வயது | : | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது இராஜபாளையம் அரசு மருத்துவமனையில் கூடுதல் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.09.2023 அன்று 12.15 மணிக்கு நான் பணியில் இருக்கும் போது, ஜெயக்குமார் என்ற 46 வயதுடைய ஆண் நபர் 108 ஆம்புலன்ஸில் சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் அரிவாள் மற்றும் கத்தி வைத்து 12.09.2023 அன்று இரவு 11.00 மணிக்கு அவரது வீட்டிற்கு அருகே வைத்து தன்னை தாக்கியதாக கூறினார். அவரை நான் பரிசோதனை செய்தபோது, அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). அவருக்கு இடது தலை கபாலப்பகுதியில் 10 x 2 cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

(2). முன்தலை ஓட்டில் 10 x 4 cm அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

(3). அவருக்கு பல அளவுகளில் பல கிழிந்த காயங்கள் வலது தோள்பட்டையிலும், வலது முதுகு தோள்பட்டை பகுதியிலும், இடது முதுகு தோள்பட்டை பகுதியிலும், முதுகின் மேல்புறமும், கீழ்புறமும் காண்ப்பட்டது.

அவரை மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அங்கிருந்து எந்த சிகிச்சை குறிப்புகளும் வராததினால் நான் காயத்தின் தன்மையை குறித்து சான்று வழங்க இயலவில்லை. நான் வழங்கிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.5 ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்ன நேரத்தில் அவர் சொன்ன மாதிரி தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

விபத்து பதிவேட்டில் தெரிந்த நபர்கள் தாக்கினார்களா? தெரியாத நபர்கள் தாக்கினார்களா? என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான். மருத்துவ நமூனா கொண்டு வந்ததாக குறிப்பிடப்படவில்லை. காவல்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதாக நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் பார்த்த காயங்கள் அரிவாளால் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கூர்மையான பொருட்களின் மீது கீழே விழுந்தால் நான் பார்த்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:29:33 +0530